3rd September 1959]

SRI A. A. RASHEED : May I know the actual request of the Kerala Government?

MR. SPEAKER : How can the Hon. Minister answer it?

Filter-point wells

*118 *Q.*—SRI A. VEDARATHNAM : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை ஜில்லாவில் எந்தெந்த இடங்களில் எத்தனை வடி முனைக் கிணறுகள் (filter-point wells) ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன ?

(ஆ) அவற்றில் எத்தனை இப்போது நல்ல நிலையில் பயன்பட்டு வருகின்றன ?

(இ) பாசனவசதி இல்லாத வேதாரண்யம் பிர்க்காவில் இது எங்கேனும் சோதித்துப் பார்க்கப்பட்டதா ? அதன் முடிவென்ன ?

(ஈ) இந்தப் பகுதியில் இந்தச் சோதனையை மேலும் செய்யும் உத்தேசம் உண்டா ? அப்படியானால், அதன் விவரமென்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) One thousand twenty-two filter points have been sunk in Cauvery river-beds, border areas and Coleroon belt in Mayuram and Sirkali taluks.

(*b*) 989.

(*c*) Yes, Sir. Some Filter Points were found to be successful. In some places where there is thick fine clay below 8 feet below ground level up to 30 feet, the Filter points have not been successful.

(*d*) No, Sir.

SRI A. VEDARATHNAM : கரியாபட்டிணம் கிராமத்தில் ஒரு பில்டர் பாயின்ட் ஏற்படுத்தப் போவதாகத் திட்டம் இருந்ததே, அது என்ன நிலையில் இருக்கிறது ? சமீபத்தில் அங்கே பரீட்சித்துப் பார்க்க அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதுபற்றி தற்போது என்னிடம் தகவல் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

SRI M. C. MUTHUKUMARASWAMY : பில்டர் பாயின்ட் பரிசோதனை செய்வதற்கு ரூ. 25 டெபாஸிட் கட்ட வேண்டியிருக்கிறது. அப்படிக் கட்டினாலுங்கூட, ஏறக்குறைய முப்பது அடிக்குமேல் ஆழமாகத் தோண்டியும் தண்ணீர் கிடைக்கவில்லையென்றால், ரூ. 150 தனியாகக் கட்டினால் போர் பாயிண்ட் வைக்கிறார்கள். பில்டர் பாயிண்டையே அதிக ஆழமாகத் தோண்டுவதற்குப் போதிய நடவடிக்கையை அரசாங்கம் ஏதாவது எடுத்துக்கொள்ளுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : பில்டர் பாயிண்ட் கிணறுகள் என்றால் முப்பது அடிக்குள்ளே தண்ணீர் இருக்கவேண்டும். முப்பது அடி வரையில் பாறையோ களி மண்ணோ இல்லாமல் மணற்பாங்காக இருக்கவேண்டும். இரண்டும் இருந்தால்தான் பில்டர் பாயிண்டை நாம் ஏற்படுத்த முடியும்.

Health Officers

*119 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether more than 50 per cent of the permanent Health Officers' posts are now being held by retired officers; and

(*b*) if so, the reason for the same?